
CFM/L/19

# இரத்ததானம்

## சமூக விழிப்புணர்வு

# இரத்ததானம் செய்ய விரும்புவோர்க்கான வழிகாட்டி



# இரத்ததானம் செய்து ஓர் உயிரைக் காப்பற்றுங்கள்

"தானங்களிலேயே மேலானது இரத்ததானம்"

தயாரிப்பு

சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,
சமுதாய மருத்துவத் துறை, மருத்துவபீடம்,
யாழ்பல்கலைக்கழகம

அனுசரணை

**SEWALANKA FOUNDATION**

No. 51, Vairavakovil Road, Vairavapulliyankuam,
Vavuniya. Tel: 024 - 20490, Fax : 024 - 21354
Email : rrevaslf@ sltnet.lk

(19)

# குருதி பற்றிய ஓர் அறிமுகம்

- ஒரு சராசரி மனிதனின் (30 வயதில் 70kg) உடல்நிறையில் 8% குருதியாகும்.

- சராசரி மனிதன் தன் உடலில் 5-6 லீற்றர் குருதியைக் கொண்டிருக்கின்றான். அதாவது ஆணில் ஒரு கிலோகிராமில் 76ml குருதியும் பெண்ணில் ஒரு கி.கிராமில் 66ml குருதியும் காணப்படுகிறது.

- ஒரு மனிதனுக்கு ஒரு கி. கிராமிற்கு 50ml குருதி அதன் தொழிற்பாட்டிற்கு போதுமானதாகவும் மிகுதி தேவைக்கு மிஞ்சியதாகவும் காணப்படுகிறது.

- குருதியானது மனித உடலினுள் ஓர்மூடிய சுற்றோட்ட தொகுதியினுள் இதய பம்பியினால் சுற்றியோட்டப் படுகிறது.

- குருதியானது குருதிக் கலங்களையும் கலமல்லாத குருதி நீர்ப்பாயத்தையும் (Plasma) கொண்டுள்ளது.
  இதில் 45% குருதி கலங்களாகவும்,
  மிகுதி 55% குருதி நீர்ப்பாயமுமாகும்.

- குருதிக் கலங்கள்
  i) செங்குருதிக்கலங்கள் - RBC
     * 5 million/ $mm^3$
     * ஒன்றின் வாழ்க்கை காலம்- 120 நாட்கள்

  ii) வெண்குருதிக் கலங்கள் - WBC.
     * 4000-11000/$mm^3$
     * வாழ்க்கை காலம் - 6மணித்தியாலம்- ஆண்டுகள்

  iii) குருதிச் சிறு தட்டுக்கள் - plateletes
     * 200,000-500,000million/ $mm^3$
     * வாழ்க்கை காலம்- 4 நாட்கள்

- குருதி நீர்ப்பாயத்தில் 90% நீராகவும் 7.5% குருதிப்புரதமாகவும் மிகுதியில் கனியுப்புக்கள், ஓமோன்கள், விட்டமின்கள் மற்றும் பல பதார்த்தங்கள் அடக்கப்படுகின்றன.

- இக்குருதியே உடற்கலங்களின் உயிர வாழ்விற்கு தேவையான ஒட்சிசன், போசணை பொருட்கள் மற்றும் ஏனைய பதார்த்தங்களையும் வழங்குகிறது.

சாதாரண ஒருவரின்:-

i) இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 60-90 தடவைகள்

ii) குருதி அமுக்கம்

- சுருக்க (systolic) 100 - 120 mmHg
- விரிவு (Diastolic) 70 - 90 mmHg

* இவை வயதிற்கு ஏற்ப வேறுபடும்.

iii) குருதி நிறப்பொருளின் (Haemoglobin)

அளவு:- 1 ஆணில் 100ml குருதியில் 12-16g

2 பெண்ணில்100ml குருதியில்11-15g

## மனிதர்களிடையே காணப்படும் குருதி கூடட் வகைகளும் அவற்றின் பரம்பல் வீதங்களும்

* O - 45%
* B - 10%
* A - 41%
* AB - 4%

இன் நான்கு கூட்டத்தினுள்ளும் RH காரணி உடையவர்கள் ($RH^+$)&RH காரணி அற்றவாகள் ($RH^-$) என இரு பிரிவினர் உள்ளனர்.

## குருதி ஏற்றப்படும் பொருத்தமான கூடட ஒழுங்குகள்.

| குருதி வழங்கும் கூட்டம் | குருதியைப் பெறக்கூடிய கூட்டங்கள் |
|---|---|
| $A^+$ → | $A^+$& $AB^+$ |
| $A^-$ → | $A^+$,$A^-$,$AB^+$& $AB^-$ |
| $B^+$ → | $B^+$& $AB^+$ |
| $B^-$ → | $B^+$,$B^-$,$AB^+$& $AB^-$ |
| $AB^+$ → | $AB^+$ |
| $AB^-$ → | $AB^+$& $AB^-$ |
| $O^+$ → | $A^+$ $B^+$, $AB^+$ & $O^+$ |
| $O^-$ → | $A^+$ $A^-$,$B^+$,$B^-$$AB^+$,$AB^-$,$O^+$&$O^-$ |

## ஏன் இரத்ததானம் செய்ய வேண்டும்?

எக் காரணங்களினாலேனும் ஒருவரில் குருதியின் அளவு தீவிரமாக குறையுமாயின்(40 வீதத்தினால்) குருதி ஏற்றுவதே அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரே வழியாகும்.

(உ+ம்):-

1) வீதி விபத்துக்கள்.
2) பாரிய சத்திர சிகிச்சைகள்
3) மகப்பேறு
4) குருதி உறையா நோய்.

இது தவிர வேறு சில காரணங்களிற்காகவும் குருதி ஏற்படுகிறது.

(உ+ம்) குருதிச்சோகை (Anaemia)

## யார் இரத்ததானம் செய்யலாம்?

> 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட

> 45kg க்கு மேற்பட்ட உடல் நிறையும்

> 11.5g/100mlக்கு மேற்பட்ட குருதிநிறப்பொருளும் கொண்ட அண்மைக் காலங்களில் பாரிய நோய்தாக்கத்திற்குட்படாத ஆண், பெண் இருபாலரும் தாராளமாக இரத்ததானம் செய்யலாம்.

## ஒருவர் எவ்வளவு குருதியை தானம் செய்யலாம்?

ஒருவர் தன் உடல்நிறையில் 1kgக்கு 8ml என்ற வீதத்தில், அதாவது 55kg உடையவொருவர் 450ml (1பைந்) குருதியை எந்தவித பிரச்சினைகளுமின்றி கொடுக்க முடியும்.

## எவ்வளவு கால இடை வேளைகளின் பின்னர் மீண்டும் மீண்டும் இரத்ததானம் செய்யலாம்?

ஆண்கள் **4** மாதத்திற்கு ஒரு தடவையும் பெண்கள் **6** மாதத்திற்கு. ஒரு தடவையும் தாராளமாக தானம் செய்யலாம்.

## இரத்ததானம் செய்தல் உடலிற்கு பாதிப்பானதா?

இல்லை, ஊசியினால் குற்றும்போது ஏற்படும் காயத்தைத் தவிர எந்தக் காயமும் உடலில் தோன்றாது.

> குருதி கொடுத்தவர் தன் வழமையான வேலைக்கு உடன் திரும்பலாம்.

> அத்துடன் கொடுக்கப்பட்ட முழுக்குருதியும் **21** நாட்களுக்குள் புதிதாக உருவாக்கப்பட்டு இரும்பு ஈடு செய்யப்பட்டுவிடும்.

## இரத்ததானம் செய்வதினால் ஒருவர் பெறும் நன்மைகள்.

1) இலவசமாக தன் உடலைப்பற்றிய பின்வரும் தகவல்களை அறிந்து கொள்வார்.
   * நாடித்துடிப்பு
   * நிறை
   * குருதி அமுக்கம்
   * குருதிக் கூட்ட வகை (A,B,AB or O)
   * குருதி நிறப்பொருளின் அளவு

2) நுண்ணிய குருதிச் சுற்றோட்டம் (Mic`rocirculation) விருத்தியடையும்.

3) புதிய செங்குருதிக் கலங்களின் உற்பத்தி என்பு மச்சைகளில் தூண்டப்படும்.

4) ஓர் உயிரைக் காப்பாற்றிய மனநிறைவு அடைவார்.

## இரத்ததானம் பற்றிய தவறான கருத்துக்களும் உண்மைகளும்

இரத்ததானம் செய்தபின்:-

X மயக்கமடைவர்

√ இல்லை அவ்வாறு அடையினும்அது அவரின் மனப்பயத்தினாலன்றி குருதியிழப்பினால்அல்ல.

X வேலை செய்யக் கூடாது அல்லது முடியாது

√ உடன்வழமையான வேலைகளுக்கு திரும்பலாம். பாரஊர்தி மற்றும் விமான ஓட்டுனர்களைத்தவிர

X மேலதிக சத்துணவை உண்ண வேண்டும்

√ குருதி நிறப்பொருளின் உற்பத்திக்கு தேவையான இரும்பு (Fe) சத்து, மற்றும் விட்டமின்கள் ஏற்கனவே போதிய அளவில் சேமிப்பில் உள்ளன.

X நோய் தொற்றலுக்கு ஆளாவார்.

√ எல்லா படி முறைகளும் தொற்று நீககிய பின்னரே மேற் கொள்ளப்படுவதினால் நோய் தொற்ற வாய்ப்பே இல்லை.

X உடல் நிறை கூடும் அல்லது குறையும்

√ இவ்விரு கருத்துக்களுக்கும் இதுவரை விஞ்ஞானரீதியான ஆதாரங்களோ அன்றி. விளக்கங்களோ இல்லை.

X எடுக்கப்படட குருதி குறிப்பிட்ட காலத்தின் பின்னர் வீசப்படுகிறது.

√ தற்கால விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்தி. செங்குருதிக் கலங்கள் **(RBC),** குருதிச் சிறுதட்டுக்கள் **(plateletes)** குருதிப்பாயம். **(plasma)** எனப் பிரிக்கப்பட்டு **(Blood component)** பயன் படுத்தப்படுகிறது. இதில்

செங்குருதிக்கலம் - 42 நாட்களுக்கும்
குருதிச்சிறுதட்டு - 5
குருதிநீர்பாயம் - 1 வருடத்திற்கும் சேமித்து வைத்து பயன்படுத்தப்படுகிறது.

## எடுக்கப்பட்ட குருதி , என்னென்ன நோய்களுக்காக பரிசோதிக்கப்பட்ட பின்னர் ம்ற்றவர்களுக்கு ஏற்றப்படுகிறது?

1. எயிட்ஸ் - (AIDS)
2. ஈரல்அழற்சி - B - (Hepatitis-B)
3. சிபிலிசு - (syphilis)
4. மலேரியா - (Malaria)

## யார் ஒருபோதும் இரத்ததானம் செய்யக்கூடாது?

1) பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஈரல் அழற்சி - B(செங்கமாரி) யினால் பாதிக்கப்பட்டவர்.

2) எயிட்ஸ் அல்லது HIV காவி உடையவர்.

3) சிபிலிசு. (பால்வினை) நோயினால் பீடிக்கப்பட்டவர்.

4) ஊசிமூலம் போதைமருந்து ஏற்றுபவர்கள்.

**நீங்கள் இரத்ததானம் செய்ய புறப்பட்டுவிட்டீர்களா?**



2002